தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு.

துணர் உரு	திருவள்ளுவர் யாண்டு கககூ0 ஆடி, 1949—ஜூலை	மலர் ச

நன்றி யுரை.

தமிழ்ப்பொழில் உச-ஆவது துணர் பொலிந்த பின்னர் நம் சங்கத்திற்குப் பெரும் பொருள் உதவிய பேரன்பர்களை மிக மகிழ்ச்சியுடன் அறிமுகம் செய்கின்றோம். இந்த அன்பர் எல்லாருக்கும் சங்கத்தின் நன்றி தெரிவிக்கிறோம்.

திருவாளர்கள்	ரூ.	அ.
இ. மா. கோபாலகிருட்டினக் கோன், மதுரை ...	400	0
S. R. நாயடு, நாகபட்டினம் ...	250	0
அ. மு. சுப்பராயச் செட்டியார் (உடன்பிறந்தார்) நாகை (முதற் பகுதி)	201	0
தமிழ்ப் பேரன்பர், திருச்சிராப்பள்ளி ...	104	0
கி. மாரிமுத்துப் பிள்ளை, அன்னப்பன்பேட்டை	101	0
கோ. தியாகராச முதலியார், நாகூர் ...	100	0
இராசு. நடேசத் தேவர், ஆயக்காரன் புலம்–இரண்டாம் சேர்த்தி ...	100	0
ச. சகதீசப் பிள்ளை, பெருவழிப் பகுதி அலுவலாளர், திண்டுக்கல்	100	0
நீ. திருநாவுக்கரசுப் பிள்ளை இருப்புப் பாதைக் கணக்காய்வார், பழநி	100	0
க. ஒ. பெருமாள்சாமி பிள்ளை, பெருவழித் துணைப் பொறிவலாளர், பழநி	100	0
T. வீரபத்திர பிள்ளை, கீழ்வேளூர் ...	100	0

திருவாளர்கள்	ரூ.	அ.
T. S. இராமச்சந்திர நாயடு, நுணுக்காடு தென்பாதி (பிற்பகுதி)	75	0
V. தங்கவேற் பிள்ளை, பி. ஏ., தஞ்சை ...	100	0
வயி. கணபதியா பிள்ளை, வெளிப்பாளையம், நாகபட்டினம்	100	0
கைலாய அறநிலையம் ...	69	0
தஞ்சைக் கோட்டைக் காய்கனி வணிகர் சங்க ஆண்டுக்கொடை	51	0
இராம. கும. சு. குமரப்பச் செட்டியார், பலவான்குடி ...	51	0
M. M. இராமையா பிள்ளை, திருக்கோளிலி ...	50	0
வ. சுந்தரேசம் பிள்ளை, பி. ஏ., மணலி ...	50	0
R. C. வேங்கடராம நாயடு, திருக்குடந்தை	25	0
S. சபாபதித் தேவர், கி. மு., எட்டுக்குடி ...	25	0
K. சிதம்பர வன்னியர், திருவாய்மூர் ...	25	0
ப. அருணசல முதலியார், ,, ...	25	0
Dr. C. கோபாலகிருட்டின பிள்ளை, பழநி ...	25	0
R. S. திருப்பதிச் செட்டியார், சின்னக்காபட்டி ...	25	0
Dr. V. K. இராமச்சந்திரம் பிள்ளை, புதுக்கோட்டை ...	25	0
த. பொ. கை. அழகிரிசாமி பிள்ளை, தஞ்சை ...	20	8
தெ. நா. வீ. தட்சணமூர்த்தித் தேவர், வேளாங்கண்ணி	20	0
கோ. கணேச பிள்ளை, புதுக்கோட்டை ...	15	0
வே. பரமசிவம் பிள்ளை, கொத்தன்குடி (முற்பகுதி) ...	10	0
S. பழநிச்சாமி உடையார், பி. ஏ., பி. எல்., வழக்குரைஞர், திண்டுக்கல் ...	10	0
அ. சு. கோ. சுப்பிரமணிய பிள்ளை, அரசவைக் கழகத் தாளாளர், புதுக்கோட்டை ...	10	0
Dr. த. மா. அப்பர்சாமி பிள்ளை, புதுக்கோட்டை	10	0

திருக்குறள்
பொன்னுரைப் பகுதிகள்.

உரைகாரர்: கொக்குவில் திரு. வ. பொன்னையா, B. A. (Hons.), Ph. D,

(முற்றொடர்ச்சி: துணர் உரு, மலர் ங, பக்கம் 72.)

கள்ளாமை.

3. கள்வார்க்குத் தள்ளு முயிர்நிலை கள்ளார்க்குத்
தள்ளாது புத்தே ளுலகு.

(இ-ள்.) கள்வார்க்கு உயிர் நிலை தள்ளும்—தவஞ் செய்வாராவார் பிறன்பொருளை வஞ்சனையாற் கொள்வாராயின், அவர்க்கு மறுமைக்கண் மேற்கதி வீடுபேறுகளையன்றித் தவஞ் செய்தற் குரிய மக்கள் உடம்புந் தவறும்; கள்ளார்க்குப் புத்தேளுலகு தள்ளாது-அது செய்யாராயின்,

திருவாளர்கள்		ரூ.	அ.
R. சாமிநாத பிள்ளை, மானுங்கோரை	....	5	0
S. பஞ்சாபகேச ஐயர், பெருவழி அலுவல் மேற்பார்வையாளர், பழநி	....	5	0
சச்சிதானந்தச் சோழகர், கூடலூர்,	...	5	0
தொ. ச. சு. பசுபதிநடராசத் தேவர், சேகல் மடப்புரம்	....	5	0
M. L. இராமசாமி பிள்ளை, ஆறுமுகமங்கலம்	...	2	0
L. குப்புசாமி ஐயர், உதவிப் பொறிவலாளர் அலுவலக முதல்வர், பழநி	...	2	0
திருத்துறைப்பூண்டி வித்துவான் திரு. ப. ச. நடேசன் அவர்கள்வழி ரூ.5-க்குக்குறைந்தநன்கொடைச்சேர்ப்பு		15	0

அவர் விரும்பின் அவர்க்குப் புத்தேளுலகுந் தவருது, வீடு பேருகிய பயனுந் தவருது, ஆகலான் தவஞ் செய்வா ருவான் கள்ளாமை காக்க தன் னெஞ்சு. (எ-று)

நான்க னுருபு இரண்டிடத்தும் உபகாரப் பொருளது. தள்ளுதல் தவறுதல். அஃது இப்பொருட்டாதலை, 'உள்ளுவ தெல்லா முயர் வுள்ளன் மற்றது, தள்ளினுந் தள்ளாமை நீர்த்து' என்பதனுனு மறிக. உயிர்நிலை யென்றது உயிர் நிற்றற் கிடனுகிய உடம்பை. ஈண்டு அது மக்களுடம்பைக் குறித்து நின்றது. 'உண்ணுமை யுள்ள துயிர்நிலை' என்புழி யும் அது இப் பொருட்டாதல் காண்க. உயிர்நிலை யென்பதன் பின் இறந்தது தழீஇய வெச்ச வும்மையும், புத்தேளுலகு என்பதன் பின் எதிரது போற்றிய வெச்சப் பொருளொடு சிறப்புப் பொருளையுந் தரும் உம்மையும் விகாரத்தாற் ருெக்கன. மறுமைக்கண் என்பது குறிப் பெச்சத்தாற் பெறப்பட்டது.

'பிறன் பொருளைக் கள்வே மென்று சொல்லுதலை உள்ளலுந் தீதென்றீர். அத்தீமைதான் என்னை? கள் ளாமையான் வரும் நன்மைதான் என்னை' என்ருற்கு உத்தரமாக இக்குறளைத் தந்தா ரென்க.

தவஞ் செய்வாராவார் களவின்கண் தங்கருத்தைச் செலுத்தி நின்ருராயின், அன்னுர் மறுமைக்கண் மேற்கதி வீடுபேறுகளாயினும் தவஞ் செய்தற்குரிய மக்கட் பிறப் பாயினும் பெருதொழிந்து, புல், புழு, விலங்கு முதலிய பிறவிகளையேனும், பல்லூழிகாலங் கற்பாறைமீது பாடா ணம் போற் கிடக்குங் கதியையேனும் பெறுவா ரென்றும், அன்றிக் களவின்கண் தங்கருத்தைச் செலுத்தாது கள்ளாமையென்னுஞ் சாதனத்தைச் செய்து நின்ருராயின், புத்தேளுலகே யாகுக, வீடுபேருகிய பயனேயாகுக அவர் விரும்பின் விரும்பியவாறே பெறுவா ரென்றும் ஆகமங்கள் கூறுவதை யுடம்பட்டுத் தவஞ்செய்வாராவார் கள்ளுதலைத்

தவிர்ந்து கள்ளாமைச் சாதனந் துணைகொண்டு தவஞ் செய்து வீடுபேறு பெறுக வென்று கூறியவா ருயிற்று.

இக்குறளுக்குப் பரிமேலழகர்' களவினைப் பயில்வார்க்குத் தம்மின் வேறல்லாத உடம்புந் தவறும், அது செய்யாதார்க்கு நெடுஞ்சேணதாகிய புத்தேளுலகுந் தவருது, என்னு முரையையும், உயிர் நிற்றற் கிடனுகலின் உயிர் நிலை யெனப்பட்டது, சிறப்பும்மைக ளிரண்டும் விகாரத் தாற் ெருக்கன. இம்மை யினும் அரசனுலொறுக்கப் படுதலின் உயிர்நிலையுந் தள்ளு மென்றும், மறுமையினுந் தேவராதல் கூடுதலிற் புத்தேளுலகுந் தள்ளா தென்றுங் கூறினுர் என்னும் உரை விளக்கத்தையுந் தந்தார்.

கள்ளாரது உயர்வை அவர்க்குப் புத்தேளுலகுந் தவருது என்பது சிறப்பிக்குமாகலான், புத்தேளுலகு என்பதன் பின் ெருக்க வும்மை சிறப்பும்மை யாகு மெனினும் கள்வாரது இழிவை அவர்க்கு உயிர் நிலையுந் தவறு மென்பது சிறப்பியா தாகலான், உயிர் நிலை என்பதன் பின் ெருக்க வும்மை சிறப்பும்மை யாகா தாகையான், 'சிறப்பும்மைகள் இரண்டும் விகாரத்தாற் ெருக்கன' என்னு முரை போலியுரை யென்க.

இனிக், களவினைப் பயில்வாரை அது பயின்றன ரென்று அரசன் கண்டாலன்றி ஒருறுகையானும், அது பயின்றன ரென்று கண்டாலும் உயிர்நிலை தவறத் தக்கதாக அவன் ஒறுப்பா னென்பது துணிதல் முடியாதாகையானும், இம்மையினும் அரசனு லொறுக்கப் படுதலின் உயிர்நிலையுந் தள்ளும் என்பதும் போலியுரை யென்க.

இப்பாட்டு என்னுதலிற்றோ வெனின், தவஞ் செய்வானுவான் களவின்கண் தன் கருத்தைச் செலுத்தி நின்றுனயின், மறுமைக்கண் மேற்கதி வீடுபேறுகளே யன்றி அவை பெறுதற்குரிய மக்கட் பிறவியையுந் தவறுவனுகையானும், அன்றிக் கள்ளாமை மேற்கொண் டொழுகினு

ணுயின் புத்தேளுலகே யன்றி வீடுபேறுந் தவருணுகை யானும், அன்னுன் மேற்கதி வீடுபேறுகளை விழையின் கள்ளுதலைக் கடிந்து கள்ளாமை மேற்கொண் டொழுகுக. (எ-து)

4. களவினு லாகிய வாக்க மளவிறந்
தாவது போலக் கெடும்.

(இ-ள்.) களவினுல் ஆகிய ஆக்கம்—தவஞ் செய்வாற்குக் களவு காரணமாக உளதாகிய செல்வம்; ஆவது போல அளவிறந்து கெடும்—வளர்வது போலத் தோன்றி அவனது ஆன்ம சிற்சத்தியாகிய பிரமாணத்தை இறக்கச் செய்து தானுங் கெடும், ஆகலான் அன்னுன் கள்ளாமை காக்க தன் னெஞ்சு. (எ-று)

மூன்றனுருபு கருவிப் பொருளது. ஆகிய வாக்கம் என்புழிச் செய்த வென்னும் பெயரெச்சம் கரும கர்த்தனது பெயர்கொண்டு முடிந்தது. ஆக்கம் காரிய வாகுபெயர். ஈண்டு அது அதற் கேதுவாகிய செல்வத்தைக் குறித்து நின்றது. அளவு ஆன்ம சிற்சத்தியாகிய பிரமாணம். இறந்து என்பது இறக்கச் செய்து என்னும் பிறவினைப் பொருட்டு. அது 'குடி பொன்றிக் குற்றமு மாங்கே தரும்' என்புழிப் பொன்றி யென்பது பொன்றுவித் தென்னும் பொருளில் நின்றுங்கு நின்றது. ஆவது தொழிற் பெயர்.

'நீர் கூறிய தீமையும் நன்மையும் மறுமைக்கண்ணே யன்றி இம்மைக்கண் வாரா. இம்மைக்கண்ணே அக் கள்ளுதல் யான்வேண்டும் பொருள்க ளெல்லாவற்றையுந் தந்து என்னைச் செல்வ னுக்கி ஒன்றுனுங் குறைவிலனுகச் செய்து தவத்தின்கண் நிலை நிறுத்துகின்றதே' என்றுற்கு 'அச் செல்வம் முன்னர்த் தான் வளர்வது போல ஒரு தோற்றங் காட்டி ஆன்ம சிற்சத்தியாகிய பிரமாணத்தை

இறக்கச் செய்து தானுங் கெடும்' என்னு மிம்மைப் பயன் கூறுவார் இப் பாட்டைத் தந்தா ரென்க.

ஆன்மாவானது தனது சிற்சத்தி பெத்த நிலையில் அசத்தாயுந் தனக்கு வேருய் நின்று விளக்குகின்றன வாயு முள்ள காண்டல், கருதல், உரையெனும் பாச ஞானங் களால் விளங்கப்பெற்று அசத்தாகிய ஏகதேசப் பொருள் களை அறியுழி அப் பொருள்கள்பாலும், முத்தி நிலையில் சத்தாயும் தனக்கு அன்னியமின்றி ஆதாரமாய் உடனின்று விளக்குகின்றதாயு முள்ள சிவஞானமாகிய வியஞ்சகத்தான் விளங்கப் பெற்றுச் சத்தாகிய சிவத்தை யறியுழி சிவத்தின் பாலும் அதுவதுவாய் அழுந்தி நின்றறியு மாகலான், சத்து மசத்துமாகிய அறியப்படு பொருள்க ளெல்லாம் பிரமேய மென்றும், அவற்றை யறியும் ஆன்மாவே பிரமாதா வென் றும், அவ்வறிவு நிகழ்ச்சியே பிரமிதி யென்றும், பெத்தத் தின்கண் மாத்திரம் விளங்குங் காண்டல், கருதல், உரை யென்னும் வியஞ்சகங்களன்றிப் பெத்தத்தின்கண்ணும் முத்தியின்கண்ணும் ஒப்பத் தொழிற்படும் ஆன்ம சிற் சத்தியே அளவு என்று சொல்லப்படும் பிரமாண மென்று மறிக.

இனிக், காண்டல், கருதல், உரை யென்னும் வியஞ் சகங்களானவை ஏகதேசப் பொருள்களை அறியுழி உபகாரஞ் செய்து நிற்கு மாகலான், உபசாரத்தானே பிரமாணமெனப் படுவன வன்றி உண்மையானல்ல வென்பதையு மறிக.

தவஞ் செய்வாணுவான் சிவோகம்பாவனை யென்னுஞ் சாதனத்தைச் செய்யச் செய்ய அச் சாதனமே காரணமாக உலகனைத்தும் அவன் வயப்பட்டு நிற்கும். அவன் விரிந்த அறிவும் பரந்த சிந்தையு முளனுயும் உலகத்துப் பொருள் கள் அனைத்துமாயும் நிற்பானுகையான், அவன் தனக்கு வேண்டிய வேண்டிய பொருள்களை நினையுந்தோறும்

அவ்வவற்றை அவ்வப் பொருளுடையாராகிய சிவனடியார் அவன் முன்னிலையில் வைத்துப் பணிந்து நிற்பர். அங்ஙனம் நிற்க, அவன் பண்ணைப் படைத்த பெருநிதிக் கிழவன் போன்றிருப்பன். அவ்வாறன்றிப் பிறர் பொருளைச் சுட்டிக் கருதி அவரை மயக்கி நின்றானாயின், அவனுக்கு அக்களவா னய செல்வங்கள் வளர்வனபோல ஒரு தோற்றங் காட்டும். காட்ட, ஏகதேச வறிவினையே கொடுக்குங் காண்டல், கருதல், உரை யெனும் வியஞ்சகங்கள் ஐய விபரீத வுணர்வுகளோடு கூடித் தலைப்படும். அவை தலைப்படக், கருவிகளின்றிச் சிவஞானங் கண்ணாகச் சிவசத்தையறிதற் குரிய ஆன்ம சிற்சத்தியாகிய பிரமாணம் விளங்காது மறையும். அது மறையச், சுட்டறிவு முன்னையினும் மேம் பட்டுத் தவத்தினிற் கருத்து அருகும். அது அருகப், பிறரை மயக்கி அவர் பொருளை வஞ்சித்துக் கொள்ளு மாற்றலும் இல்லையாகும்; முன்னர்ப் பெற்ற செல்வங்களும் நுகர்ச்சி முகத்தானும் பிறவாற்றானும் ஒன்றொன்றாய்க் கெட்டொழி யும் என்று கூறியவா றாயிற்று.

இக் குறளுக்குப் பரிமேலழகர் ‘களவினா லுளதாகிய பொருள் வளர்வதுபோலத் தோன்றித் தன் னெல்லையைக் கடந்து கெடும்’ என்னு முரையையும், ‘ஆக்கத்திற் கேது வாகலின் ஆக்க மெனப் பட்டது. எல்லையைக் கடந்து கெடுதலாவது தான் போங்காற் பாவத்தையும், பழியையும் நிறுத்திச் செய்த வறத்தையும் உடன்கொண்டு போதல்’ என்னு முரை விளக்கத்தையுந் தந்தார்.

இப் பொருளையே ஆசிரியர் நுவலப் புகுந்தாராயின், இவ் வெண்பாவை இல்லற வியலிலேயன்றித் துறவற வியலில் வையா ரென்க.

இப் பாட்டு என்னுதலிற்றோ வெனின், தவஞ் செய்வானவான் பிறர் பொருளைச் சுட்டி விழைதலாகிய

(114-ஆம் பக்கம் பார்க்க.)

இசைத் தமிழ்

திரு. சங்கீதம் ப. சுந்தரேசன்,
தேவார இசை யாசிரியர், அரசர் கல்லூரி, திருவையாறு.

௩. அலகு முறைகள்.

பழந் தமிழ் நாட்டு, இசை வல்ல பாணர் பெருமக்கள் முதன் முதலாகக் குழலிலும், வில்யாழ் போன்ற சிறிய யாழ்க் கருவி களிலும் இயற்கை முறையில் ஐந்திசைகள் கொண்டும், பின்னர், கால வரையறையிலே புதிய இசையிடம் இரண்டு ஆக்கி, ஏழிசை கண்டு, அம் முறையே பெரிய யாழ்க் கருவிகளையும் செய்து, ஏழிசைகளைக் கிளை வழியாகக் கணித்துத் தாரத்தி னந்தர மறிந்தும், அந்தரங்களையும் ஐவகையாகக் கண்டு, இசை யிடங்கள் பன்னிரண்டாகக் கொண்டும், இம் முறைக் கேற்பவும் பல் வகைக் கருவிகள் செய்து அவற்றினை இசைத்து மகிழ்ந் திருந்தனர். ஏழிசைகளும் அத னந்தரங்களும் இவ்வா றமை வுற்றன :- தாரம், அந்தரம், குரல், அந்தரம், துத்தம், அந்தரம், கைக்கிளை, உழை, அந்தரம், இளி, அந்தரம், விளரி. இவ்வா றுன பன்னிரண்டிசை யோசைகளைக் கருவிகளில் இசைத்து மகிழ்ந்து அறிய அறிய, இவ் வோசைகளினிடை யமைந்த நுட்பங்களைப் பெருக ஆராய விரும்புவதும் இயல்பன்றோ! அந்தரங்கள் (இடைவெளி யிசை) இலாது, யாதேனும் இரண்டிசைகள் அடுத்தடுத்து ஒன்றி நிற்கின்ற தன்மை உளதோ என ஆராய முற்படுங்கால், வெள்ளிடை மலை யெனக் கைக்கிளையும், உழை யும், விளரியும், தாரமும் முன்னிற்பதை யறியலாம். கைக்கிளை யும் உழையும் தனித்தனி யிசையாயினும், இவற்றி னிடைவெளி ஒரு மாத்திரை யளவே நிற்றலால், ஆங்கோர் யிசை யமைக்கவே இடமில்லை. ஆயினும் அவ் விரண்டிசைக்கும் இடை யமைந்த மாத்திரை யளவானது பழங்காலப் பாணர் பெருமக்களின் அறிவை, கைக்கிளைக்கும் உழைக்குமிடையே அமைந்த மாத்திரை அளவு போன்றே, ஏழிசைகளையும் அந்தரங்களையும் ஆராய்ந்

தமைக்குமாறு தூண்டிற்றெனவே அறியக் கிடக்கின்றது. இனி, இவ் வாராய்ச்சி முறையை ஓரளவு தெளிவுறுத்துவான் வேண்டிப், பழங்காலத்தில் பாணர் பெருமக்கள் பலர் கூடி ஆராய்வது போன்று கதை வடிவிற் கற்பனை செய்து எழுதிச் செல்வாம். பொழிலன்பர்கள் யாவரும் இசையோசையின் நுட்பங்களை அறிந்துணர்வார்களாக.

பழங் காலத் தமிழ் நாடு; காவிரிக் கரை; ஆறு அகலமாகவும் ஆழமாகவும் இருக்கின்றது; வேனிற்காலம்; ஆற்றில் நீர் இல்லை; கரையோரமாக நீண்ட கிளைகளிலிருந்து, பருத்து இறங்கி இருக்கும் விழுதுகளோடு கூடிய ஆலமரங்கள்; கரைக்குச் சற்று அப்பால் பல குடிசைகள்; அங்கு வாழ்பவர் யாவரும் பாணர்களே யாவர். தனித்த தோர் குடிசையி னுள்ளே பல பாணர்கள் கூடி இசை யாராயத் தமது ஆசான் வருகையை நோக்கி யமர்ந்துள்ளனர். அங்கு ஓரிடத்தில் நரம்புகள் கட்டியும் கட்டாததுமான பல் வகைப் பழைய, புதிய யாழ்க் கருவிகள் நிரலாக வைக்கப்பட்டிருக்கின்றன. ஆசான் மெல்ல வருகின்றார். வயது முதிர்ந்தவர். நெடுநாளாக யாழிசைத்து மகிழ்ந்து வருபவர். சிறிய மேடைமீ தமர்கின்றார். எதிரே கட்டிளங் காளை யான பாண் சிறுவனும் வந்தமருகின்றான். முதலில் பெரும் பாணர் பெரிய கருவியில் ஐந்திசைப் பண்களையும், ஏழ் பெரும் பாலைகளையும், அந்தரப் பாலைகளையும், அவற்றை நீக்கியும், சேர்த்தும், பல்வகையாக இசைத்துக் காட்டுகின்றார்.

(ஆசான் (பெரும்பாணர்) சிறுவனை வினவச், சிறுவன் (சிறுபாணர்) மறுமொழி கூறுகின்றான்.)

ஆ :—சிறுவனே! இதோ இக் கருவியை நீயும் ஒரு முறை இசைப்பாயாக!

சி :—ஐயா அப்படியே! (ஆசானையும் யாழையும் தொழுது இசைக்கின்றான். இசைத்த பிறகு)

ஆ :—பழங் காலத்தில் முதன் முதற் றோன்றிய இசைகள் எத்தனை? அவைகளின் பெயர்கள் யாவை?

சி :—முதன் முதலில் ஐந்திசைகள் தோன்றின. அவற்றின் பெயர்கள் க. தாரம், உ. குரல், ங. துத்தம், ச. உழை, ரு. இளி என்பன.

ஆ :—ஏழிசைகள் எவ்வாறு தோன்றின? அவற்றின் முறைகள் யாவை?

சி :—தாரம், குரல், துத்தம், இவற்றினேசைகளேயும் உழை, யிளியி னேசைகளேயும் அறிஞரால் ஓர்ந் துணரப்பெற்றுத் துத்தத்திற்கும் உழைக்கு மிடையேயுள்ள அளவின் நுட்ப மறிந்து, அங்கு அளவொத்த முறையில் புதிய இசையைக் கண்டு, இளிக் கப்பாலும் ஒரு புதிய இசை கண்டு, அவை களுக்கு முறையே, கைக்கிளே, விளரி யெனப் பெய ரமைத்துப், பின்னர், முறையாகத் தாரம், குரல், துத்தம், கைக்கிளே, உழை, இளி, விளரி யென வமைக்கப்பட்டன.

ஆ :—அந்தரங்கள் என்பது என்ன? ஏழிசைகளோடு அவை எவ்வாறு பொருந்தி யுள?

சி :—ஏழிசைகளின் நரம்பு நீள அளவு முறைகளே அறிந்த காலத்தில், அவ் வேழிசைகள் இருபத்தொரு நரம்புகளில் வலிந்து ஒலிக்கக் கண்டவர், பின் அந் நரம்புகளே மூன்று கூறு செய்து, முதற் கூற்றின் ஏழு நரம்புகளே, மெலிவுத்தான நரம்புகள் என்றும், இரண்டாங் கூற்றைச் சமன் தான நரம்புகள் என்றும், மூன்ரும் கூற்றினே வலிவுத் தான நரம்பு கள் என்றும் கூறினர். மேலும், அந் நரம்புகள் யாவற்றையும் நின்ற நரம்பிற்கு ஐந்தாம் நரம்பு முறையில் தெறித்துத் தெறித்து ஓசையை உணர, கைக்கிளேக் கைந்தாம் நரம்பின் ஓசை. முன்னின்ற தாரத்தினேசைக்குக் கூடி ஒலித்ததால், அவ் வோசையை இடைவெளியோசை எனும் பொருள் பட அந்தரம் எனக் கூறினர். பின்னர், அந்தர ஓசையைத் தனித்துக் காண, அஃதும் அளவொத்த

முறையில் ஐந்து ஆயிற்று. இவ்வைந்தும் ஏழிசைக ளோடு, தாரத்தி னந்தரமாகவும், குரலி னந்தரமாக வும், துத்தத்தி னந்தரமாகவும், உழையி னந்தரமாக வும், இளியி னந்தரமாகவும், இயற்கையி லமைந்து விளங்கிய நுட்பம் அறியப்பட்டது. இம் முறையி லமைந்ததே, அடியேனது கையிலிருக்கும் யாழ்க் கருவி யாகும்.

ஆ:—அந்தரம் (இடைவெளி யிசை) இலாத இசைகள் ஏதேனும் உண்டோ? ஏன்?

சி:—ஐயா! கைக்கிளைக்கும் உழைக்கு மிடையே அந்தரம் இல்லை. இது போன்று விளரிக்கும் தாரத்திற்கு மிடையே அந்தர மில்லை. ஏனெனில், தாரம், குரல், துத்தம், இம் மூன்றிசைகளின் அளவினை யறிந்து, கைக்கிளை கண்டதால், அக் கைக்கிளையானது, முன் னிருந்த உழைக்கு மிக நெருங்கி யமைந்துவிட்டது. ஆகவே, கைக்கிளைக்கும் உழைக்கும் இடைவெளி மிகமிகக் குறுகி யிருக்கின்றது. ஓசை வேறுபாட் டினையே மிக நுண்ணிய வறிவினுல் அறியவேண்டி யுளது. இடைவெளி, இங்கு அமைந்துளதைப் போன்று, இரு மடங்கேனும், மும் மடங்கேனும் இருந்தாலன்றி, அந்தரங்களாவது அரிதாகின்றது.

ஆ:—அப்படியா? இருக்கட்டும். கைக்கிளையும் உழையும் எத்துணைச் சிறிய அளவில், அஃதாவது, மிக்க நெருங்கி உளவோ, அது போன்றே, ஏழா மிசை யாகிய விளரியும், எட்டா மிசை யாகிய (மேற் ருனத்து முத லிசை) தாரமும், மிக நெருங்கி உளவோ?

சி:—ஆம், ஆம். கைக்கிளை, உழையின் இடையோசையை ஒரு நொடி யெனக் கொண்டால், அதே போன்ற ஒரு நொடி அள வோசையே, விளரிக்குந் தாரத் திற்கும் அமைந்துளது. இதில், ஏதொரு ஐயமு மில்லை.

ஆ :—ஆனால், இங்குக் கூறப்பட்ட கைக்கிளை, உழை, விளரி, தாரம் போன்று உனது கையிலிருக்கும் யாழ்க் கருவியில் அமைந்த பன்னிரண்டு இசைத் தானங் களில் வேறு ஏதேனும் இசைகள் ஒரு நொடியள வோசை கொண்டு உளவோ? ஒவ்வொரு நரம்பாக அந்தர இசைகளை தெறித்துக் காட்டிக் கூறுவா யாக.

சி :—(யாழ் நரம்பைத் தெறித்து) ஐயா! இப்பொழுது அடியேன் தெறித்துக் காட்டுவது தொடக்க இசை யாகிய தாரத்தி னந்தரம். அந்தர வகையில் இதுவே முதன்மையாக நிற்பது. இதனை யடுத்துக் குரல் நரம்பு உளது. இவ் விரண்டினையும் அடுத்தடுத்துத் தெறித்தால், ஆ! ஆ! ஐயா! அறிந்தேன் உண்மை. தாரத்தின் அந்தரமும் குரல் நரம்பும் ஒரு நொடி யோசையளவிலே தான் அமைந்துளது. பின்னர், ஏனைய...............

ஆ :—நன்கு அமைதியாக ஏனைய அந்தரங்களையும் தெறித் தறிந்து கூறுவாய்.

சி :—(ஏனைய நரம்புகளைத் தெறித்து, ஒரு முறை கேட்டு) ஐயா! இரண்டா மந்தரமும் துத்தமும் ஒரு நொடி யளவிலேயே உள. மூன்றா மந்தரமும் கைக்கிளை யும் ஒரு நொடி யளவிலேயே உள. இங்குத் தொடர்ந்து, துத்தத்தி னந்தரம், கைக்கிளை, உழை, இம் மூன்றும் ஒவ்வொரு நொடியளவிலே அமைந் துள. இதனை நன்கு அறிய மனம் மகிழ்கிறது. பின்னர் நான்கா மந்தரமும் இளியும் ஒரு நொடியள விலேயே அமைந்துள. ஐந்தா மந்தரமும் விளரி யும் ஒரு நொடி யளவிலேயே அமைந்துள. இங் கும் தொடர்ந்து ஐந்தா மந்தரமும் விளரியும் மேற் றனத் தாரமும் ஒவ்வொரு நொடி யளவிலேயே அமைந்துள!......(ஆசானைப் பார்க்கின்றான்)

ஆ:—சிறுவனே மகிழ்ந்தோம். இவ்வாறே ஒரு நொடி யள விற்கு மேற்பட்ட இசை இடங்கள் எவையேனும் உளவோ?

சி:—ஐயா! இனி, ஒவ்வொரு நொடி யளவினும் மிக் கிசைக்கும் இடம் தாரத்திற்கும் அதனந்தரத்திற் கும் இடை நின்ற வெளியும், உழைக்கும் அதனந் தரத்திற்கும் இடை நின்ற வெளியு மாக இரண் டிடங்களே தான் எஞ்சியுள.

ஆ:—அவ்வாறு எஞ்சிய இடங்கள் ஒவ்வொன்றிலும் எத் துணை நொடி யளவில் இடைவெளி யமைந்திருக்க லாம். கூறக் கூடுமா?

சி:—ஆம், கூறலாம். ஒவ்வொரு இடமும் இரண் டிரண்டு நொடி யளவு இடைவெளியி லமைந்து நிற்கின்றது. ஐயா! அடியேனுக்கு ஒரு விருப்பம். இவ்வாறு அமைவுறும் நொடி யளவை நிரலாக (வரிசையாக)க் காண ஆசைப்படுகின்றேன். அருள்புரிய வேண்டும்.

ஆ:—சிறுவனே! நீ குறிப்பாகக் கூறும் நொடி யளவினையே நமது முன்னோர்கள் அலகு எனக் கூறினர். இரண் டிசைகளி னிடையே அமைந்த நுண்ணிய வேறுபாட் டினை அளத்தற் கியைதலின், அலகு எனும் பெய ரமைக்கப்பட்டது. அலகு முறையை நிரலாகக் காண நான்கு கருவிகள் வேண்டும். உனது கையி லிருக்கும் கருவி நீங்கலாக, மற்றைய மூன்று கருவிகள் நரம்புகள் கட்டாததாக எடுத்துவா. அக் கருவிகளைக் கொண்டும் தெளிவுபடுத்துகின்றேன்.

(தொடரும்)

இசைத் தமிழ்ப் பாடல்.

5. சுந்தரர் தேவாரம்.

(திருவாரூர்)

இசையாளர்: சங்கீதம் ப. சுந்தரேசன், கும்பகோணம்.

பண்: செந்துருத்தி.

இ.—மத்தியமாவதி
22இல் பிறந்தது.

தாளம்—திச்ர திருபுடை (ஏழு எண்கள்)
"நான்கெண் நடை"

ஆ.—ச ரி ம ப நி ச்
அவ.—ச் நி ப ம ரி ச

| தனதன தனதன தனதன |
| தனதன தனதன தனதன தனதன ||

முதலடி

மீளா அடிமை உமக்கே யாளாய்ப்
பிறரை வேண்டாதே —மீளா அடிமை

துணையடி

மூளாத் தீப்போல் உள்ளே கனன்று
முகத்தான் மிகவாடி —மீளா அடிமை

கடையடி

ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்

வாளாங் கிருப்பீர் திருவாரூரீர்
வாழ்ந்து போதீரே —மீளா அடிமை

பண்.—மத்தியமாவதி.] [தாளம்—திச்ர திருபுடை (ஏழு எண்கள்)
சமமிருந்து ஆறு எண்கள் தள்ளி எடுப்பு

முதலடி

1.	; ; ; நி ச ரீ ;	; ச ரி மா ;	; ரி ம பாநிபபா ;	||
	; ; ; மீ . ளா ;	; அ டி மை ;	; உமக் கே , , , ;	||
2.	மாபமமாரீ ரி ச நி ச ரீ ;	; ச ரி ம பா ,	; ரி ம பாநிபபா ;	||
	. . . . மி . ளா ;	; அ டி மை , , . .	; உமக் கே , , , ;	||
3.	மாபமமாரீ ரி ச நி ச ரி ம ரீ	; ரி ம ப நி ப ம	; ரி ம பாநிபபா ;	||
	. . . . மீ . ளா . .	; அ டி மை , , ,	; உமக் கே , , ,	||
4.	மாபமமாரீ ரி ச நி ச ரி ம ரி ச	நி ச ரி ம ப நி ப ம	; ரி ம பநிச்நிபா ;	||
	. . . . மீ . ளா . . .	, , அ டி மை , , ,	; உமக் கே , , , ;	||
	மாபமமாரீ ரி ச சாரிச நீ பா	; நி ச ரி ம ரி ச	ச ரி மா ரி ம பா	||
	. . . . ஆ . . ளா ய்	; பி ற ரை , , ,	வே , , ண்டா , ,	||

ப மரிம ரி ச
தே , , , , , = 'மீளா வடிமை'

மாபமமாரீ ரி ச சாரிச நீ பா	; நி ச ரி ம ரி ச	ம ரிபமப நி ச் நி	||
. . . . ஆ . ளா ய்	; பி ற ரை , , ,	வே . . . ண்டா . . .	||

ப மரிம ரி ச
தே , , , , , = 'மீளா வடிமை'

துணையடி

; ; ; ம ப நீ ;	; ப் நி ச்ா ;	; ரீ , ரி ச் நி
; ; ; மூ , ளா ;	; த்தீப் போல் ;	; உள் , ளே , ,
ச்ா , ச் நி ப ம பநீ ;	; ப நி ச்ா ;	; ரீ , ம் ரி ச்
, , , , மூ , ளா ;	; த்தீப் போல் ;	; உள் , ளே , ,
ச்ா , ச் நி ப ரீ ரீ ச் நி	பா ரீ ம் ரி ச் ச்	நிப நிப மபமரி
, , , , , க ன ன் று	, மு க . த் தா	, ன் மி , , க , ,

ப மரிம ரிச
வா , டி , , , = 'மீளா வடிமை'

கடையடி

; ; ; நி ச ரீ ;	; ரி ம பா ;	; ரி ம பா நி ப பா ;
; ; ; ஆ , ளாய் ;	; இருக்கும் ;	; அடி யா , , , ர்
மா ப ம மா ரீ நி ச ச நி பா நீ	; நி ச ரி ம ரி ச	சாரிமா ; ரிமபா ;
தல் , , க ன் , , அ ல் ல ல்	; சொ , ன் ன ,	கா . . . . . ல்

(துணையடிபோற் பாடவும்)

வாளாங் கிருப்பீர் திருவாரூரீர் வாழ்ந்து போதிரே —மீளா வடிமை

104-ஆம் பக்கத் தொடர்ச்சி.

களவினைப் பயின்று நின்றானாயின், அவனுக்கு அக் களவுச் சிந்தையா னுளதாகிய செல்வம் மிகுவதுபோல் ஒரு தோற் றங் காட்டி அவனது ஆன்ம சிற்சுத்தியாகிய பிரமாணத்தை விளங்காது மறையச் செய்து தானுங் கெடுமாகலான், அன்னான் விடுபேறு விழையின் களவினைச் செய்யற்க

எ-து.

5. களவின்கட் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமந் தரும்.

(இ-ள்.) களவின்கண் கன்றிய காதல்—தவஞ் செய்வா னுக்குப் பிறர் பொருளை வஞ்சித்துக் கோடற்கண்ணே தழும்பிய வேட்கையானது ; விளைவின்கண் வீயா விழுமம் தரும்—முதிர்ச்சி யுறுதற்கண் தொலையாத துன்பத்தினைக் கொடுக்கும், ஆகலான் அன்னான் கள்ளாமை காக்க தன்னெஞ்சு.

ஏழ னுருபுகள் வினைசெய்யிடம்பற்றி வந்தன. கன் றுதல் தழும்புதல். களவின்கட் கன்றிய காதல் என்பது களவின்கட் பழகியமையான் வந்த வேட்கை யென்னும் பொருள் தந்து நிற்கின்றமையான், கன்றிய வென்னும் பெய ரெச்சம் 'ஆறு சென்ற வியர்' என்புழிப் போலச் செயப்படு பொருட் பெயர் கொண்டு முடிந்த தென்க. வீயாத என்னும் எதிர்மறைப் பெய ரெச்சம் வீயாவென ஈறு கெட்டுநின்றது. வீயாவிழுமம் என்புழிச் செய்த வென்னும் பெய ரெச்சம் கரும கர்த்தனது பெயர்கொண்டு முடிந்தது. ஈண்டுத் தொலைக்கப்படாத் துன்பத்தைத் தொலையாத துன்பமென்னும் பொருள்படக் கூறுதற்கண், செயப்படுபொருளை வினைமுதல் வாய்பாட்டானன்றி வினை முதலின் றொழிற்படக் கிளந்தது, தவஞ்செய்வானுவா னுக்குக் களவின்கண் பழகியமையான் வந்த கள்ளுதல் வேட்கையானது எளிதிற் றொலைக்கப்படாத் துன்பத்தைக்

கொடுக்குமென்று அறிவுறுத்தற் கென்க. தரும் என்பது இடவழுவமைதி. அதனைச் 'செலவினும் வரவினும்' என்றற் றொடக்கத்துச் சூத்திரத்துத் 'தரவினும்' என்பத ஞலமைக்க.

'நீர் சொல்லிய களவு செய்கின்றேன், என் ஆன்மசிற் சக்தியாகிய அளவும் சிறக்கவில்லை, அக் களவினு லாகிய செல்வமுங் கெடவில்லை' என்றற்கு, 'நினக்குக் களவின் கண்ணுள்ள வேட்கை முதிர்ச்சி யடையவில்லை. முதிர்ச்சி யுறின் அது களவாகாதென செய்தே னல்லேன் என்று கவலுதற் கேதுவாகியதும், இப் பிறப்பிற் றொலைக் கொணு தது மாகிய துன்பத்தினைக் கொடுக்கும்' என்று கூறுவார் இக் குறளைத் தந்தா ரென்க.

தவஞ்செய்வானுவான் பிறர் பொருளை விரும்பித் தன் தவத்தின் வலிமையான் அவரை மயக்கி அவர் பொருளை வஞ்சித்துக் கோடற் கண்ணே பழகிப் பழகி அப் பொரு ளாலாம் இன்பத்துட் பட்டு அக் களவின்கண்ணே தன் வேட்கையைச் செலுத்தி நின்றானுயின், அவ் வேட்கை அவனது தவக் கருத்தை அழிக்கும். அவன் முன்னரே வீடு பே றடைதல் நோக்கி ஒருவாற்றான் விடயப் பற்றை யறுத்து நின்றானுதல் பற்றித் தன் தவ வழிவைக் கண்டு என்செய்தேன் யான்! களவாகுவனவற்றையே செய்து களவாகாதன வற்றைச் செய்தே னல்லேன். இவற்றானே தவமிழந்தேனே யென்று கவலுவன். அக் கவலுதல் அவ னைப் பின்னருந் தவக் கருத்தின்கண் உய்க்கும். இம் முறையே முறையாக விடயப் பற்றுங் கள்ளுதற் பழக்க முங் கள்ளுதல் வேட்கையுந் தவவழி வுணர்ச்சியுங், கவலுதலுங், தவக் கருத்தும் ஒன்றன்பின் னென்றாக மறித்தும் மறித்தும் அவன் மாட்டுத் தோன்றும். தோன்ற விடயப்பற்று முறுகுதலின், அவனது கள்ளுதற் பழக்கமா னது கள்ளுதல் வேட்கையை முதிரச்செய்து, அம்முதிர்ச் சிக்கண் தவக் கருத்தை யழித்து, களவாகாதன செய்தே

னல்லேன் என்று கவலுதற்கேது வானதும் எளிதிற் றொலைக்கப் படாததுமான துன்பத்தினைக் கொடுத்து அப் பிறவியினைக் கெடுத்து மேலைக்கும் வித்தாய் நிற்குமென்று கூறியவா றுயிற்று.

இக்குறளுக்குப் பரிமேலழகர், 'பிறர் பொருளை வஞ் சித்துக் கோடற்கண்ணே மிக்க வேட்கை அப்பொழுது இனிது போலத் தோன்றித் தான் பயன் கொடுக்கும் பொழுது தொலையாத இடும்பையைக் கொடுக்கும்' என்னு முரையையும், 'கள்ளுதலான் எஞ்ஞான்றும் அக்களவையே பயில்வித்து அதனுற் பாவமும் பழியும் பயந்து விடுதலின், வீயா விழுமந் தருமென்ருர்' என்னும் உரை விளக்கத் தையுந் தந்தார்.

பிறர் பொருளை வஞ்சித்துக் கோடற்கண்ணே மிக்க வேட்கையானது முதற்கண் வஞ்சித்தலைச் செய்வித்து, அதனுனே தூலமாகிய ஆகாமிய வினையாகிப், பின்னர் சூக்குமமாகிய சஞ்சித வினையாகி, அதன் பின்னர் அதி சூக்கும மாகிய பிராரத்த வினையாகியே பயன்கொடுக்கு மென்பதும், இனி அப் பயனும் இப் பிறப்பின்கண் என்ப தன்றிப் பெரும்பான்மையானும் பல பிறப்புக்களுக் கப்பா லேயே விளையு மென்பதும் ஆகம நூற் றுணிபு. ஆயின், பல பிறப்புக்களுக் கப்பாலே வரக்கூடிய துன்பத்திற்கு அஞ்சுவித்து ஒருவனைக் கள்ளாவகை காத்தல் ஆசிரியர்க்கே கருத்தாகாது என்பதனுனே அழகியா ருரையைப் போலி யுரை யென்க.

இப் பாட்டு என்னுதலிற்ரே வெனின்: தவஞ் செய்வானுக்குக் களவின்கண் பழகுதல் கள்ளுதல் வேட் கையை உளதாக்கி அதனை முதிரச் செய்து தவக் கருத்தை அழித்துக் களவாகாதன செய்தேனல்லேன் என்று கவலு தற் கேதுவாகிய தொலைக் கொணுத் துன்பத்தினைக் கொடுக்கும், ஆகலான் அன்னுன் களவின்கண் பழகற்க

எ-து.

(தொடரும்)

பொருந்துமா? (ஏ)

வித்துவான் M. குஞ்சிதபாத தேசிகர்,
நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளி, நன்னிலம்.

இவ் வுலகில் இயற்கையுஞ் செயற்கையு மான பொருள்கள் பல உண்டு. அவற்றுள் தம்மைச் சார்ந்த வடிவத்தைக் காட்டக் கூடிய பொருள்கள் சில. இவற் றுட் சிறந்தன இரண்டு பொருள்களாம்.

1. கண்ணாடி (Mirror)

2. நீர்.

கண்ணாடி வெள்ளைமண், சுண்ணாம்புக்கல், (சோடா) உப்பு ஆகியவற்றின் சேர்க்கையினாலே கண்ணாடி உண் டாக்குகிறார்கள் என்ற உண்மையை இக்காலத்தில் பள்ளி யில் படிக்கும் இளைஞரும் அறிவர். ஆனால், இக் கண்ணாடி யைத் தமிழ் நாட்டில் எப்போது கையாண்டார்கள், யார் கண்டு பிடித்தார்கள் என ஆராய எடுத்துக் கொண்டால், யாரும் திட்டமாகச் சொல்லக் கூடியதாக இல்லை என்ற முடிவுக்கே வரவேண்டி யிருக்கும்.

மேல் நாடுகளைப் போல் பொருளைக் கண்டு பிடித்த வரின் வரலாறு எழுதிவைக்கும் வழக்கம் நம் நாட்டில் இல்லை என்பதை யாவரும் அறியாதிரார். அவ் வழக்க மின்மைக்குக் காரணம், தன்னுடைய ஆற்றல், இன்பம் முதலியவற்றை உள்ளவாறு எடுத்துரைக்கும் தற்பெருமை கூறுதல் கூடாது என்ற கொள்கையாலும், தன்னிடமுள்ள சிறந்த ஆற்றலை வெளிப்படுத்தின் உயர்ந்தோர் பலரும் தன்னைப்போல் ஆற்றலுடைய ராகி, தன் மதிப்புக் குறைவு படும் என்ற எண்ணத்தாலும் நேர்ந்த தாகும். இஃதே இந் நாட்டின் அரிய கலை மறைவுக் காரணம் என்பதைக் கூறவும் வேண்டுமோ?

இப்போது ஆராய்ச்சியில் பயன்படும் பழைய சங்க இலக்கியங்களே, பண்டைய நாகரிகங்களையும், சிறந்த பொருள்களின் நுண்ணறிவுகளையும் ஆராய ஒருவாறு இடந்தருகின்றன என்பதை மறப்பதற் கில்லை.

இக் கண்ணுடிப் பொருள் கீழை நாட்டில் முதன் முதல் உண்டாகிப், பின் மேல் நாடுகளுக்குப் பரவி, மேலும் மேலும் எழுந்த ஆராய்ச்சியின் காரணமாய்ச் சிறந்த முறையில் பலவற்றிற்கு உபயோகப்படுகின்றன என்ற உண்மையை மறுப்பதற்கு இடம் இல்லை.

இன்னும், தமிழ் நாட்டிலிருந்து சீனம் முதலிய இடங்களுக்குப் பரவியோ, சீனத்திலிருந்து தமிழ் நாட்டிற்குப் பரவியோ இருக்கவேண்டும். தனித்தனி ஒரே காலத்தில் கண்டு பிடித்ததாயு மிருக்கலாம்.

இக் கண்ணுடியை இலக்கியங்களில் ஆடி என்று எடுத்தாள்வர். இவ் வாடியைப் பற்றிக் கற்ருர் ஏத்துங் கலித்தொகை, சிலப்பதிகாரம், தொல்காப்பியம், குறுந் தொகை, மணிமேகலை, சிந்தாமணி, நன்னூல் ஆகிய நூல்களில் உவமையாக எடுத்தாண்டுள்ளார்கள்.

கண்ணுடியின் எதிரி லிருப்போர் ஆடினுல் நிழலுருவமும் ஆடும்; நின்ருல் நிற்கும். ஆகையால், எதிரி லிருப்போரின் செயலைப் பொறுத்ததே அன்றிக், கண்ணுடியி லுள்ள உருவம் கண்ணுடியைப் பொறுத்த தில்லை. ஆகவே, கண்ணுடி பிறர் வயப்பட்டது என்னும் பொருள் பட,

கையுங் காலுந் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல —குறுந்தொகை.

என்றும்,

ஆடிப் பாவையோடு அலர்கிழற் பாவை
கைகான் மெய்பிறி தெவையும் பையத்
தூக்கிற் றூக்கி மேக்குயர் புயர்தல்
—ஞானமிர்தம்.

என்றும் கூறியுள்ளார்கள்.

பார்ப்பவர்கள் யார் என்று கண்ணாடிக்குத் தெரியாது; கண்ணாடி பார்ப்பவர்களுக்கு நன்கு தெரியும் என்னும் பொருள் பட,

வயக்குறு மண்டிலம் (விளக்கும் நற்கண்ணாடி)
—பாலைக்கலி, வரி 25.

என்றும்,

கையகத்து எடுத்துக் காண்போர் முகத்தை
மையறு மண்டிலம் போலக் காட்ட —மணிமேகலை, காதை 25.

என்றும் குருடனுக்கு உவமையாக் கூறியுள்ளார்.

வில்லி பாரதத்தில் 'ஆடித் திருமுக மன்னர்' என்று பல இடங்களில் திருதராட்டிரனைக் குறிப்பதாலும் உணரலாம்.

இனிக், கண்ணாடி எதிரிலுள்ள பெரிய பொருளைச் சிறிதும் விடாமல் தன்னகத்துள் அடக்கி விளக்கமாகத் தெரிவிக்கும் என்பதனைத், தொல்காப்பியம் செய்யுளியலில்,

'அவற்றுட், சூத்திரந் தானே
யாடி நிழலின் அறியத் தோன்றி
நாடுத லின்றிப் பொருள்நனி விளங்க
யாப்பினுட் டோன்ற யாத்தமைப் பதுவே.'

என்ற சூத்திரத்தாலும், 'ஆடி சிறிதாயினும் அகன்றுபட்ட பொருளை அறிவித்தாற்போல' என்ற உரையாலும்,

நூற் கட்டுரை

'குமரி வேங்கடங் குணகுட கடலா
மண்டிணி வரைப்பிற் றண்டமிழ் வரைப்பில்
... ...
... ...
தெரிவுறு வகையாற் செந்தமி ழியற்கையில்
ஆடிநன் னிழலி னீடிருங் குன்றம்
காட்டு வார்போல்'

என்று சிலப்பதிகார இறுதியில் வருவதாலும் சில்வகை எழுத்தாற் பல்வகைப் பொருளை,

'செவ்வன் ஆடியிற் செறித்து இனிது விளக்கி'

எனவரும் பவணந்தியின் நூற்பாவாலும் அறியக் கிடக்கின்றன.

மேலும், கண்ணுடி ஏற்படுவதற்கு முன்னர் வட்ட வடிவமாக அரசர், அரசர் போன்ற செல்வர்கள் பொன்னிஞ லியன்ற ஆடியும் வெள்ளியிஞ லியன்ற ஆடியும் தமிழ் நாட்டில் கையாண்டனர் என்று பெரியோர் கூறக் கேட்டுள்ளேன். அதற் குதாரணமாகப் 'பொன்னின் ஆடியிற் பொருந்து நிற்போர்' என மணிமேகலையில் (காதை 19, வரி 90.) வந்துள்ளது பொருந்தும் என நினைக்கின்றேன்.

இனி, எதிருருவத்தைக் காட்டுவது நீர் நிலையே யாம். இதனை இக்காலத்தார் சிறந்த இடங்களின் எதிரில் அமைத்திருக்கின்றனர். பூஞ்செடிக்குத் தண்ணீர் பாய்ச்சவும், மற்றைய நேரங்களில் அழகிய கட்டிடத்தின் தோற்றம் அதில் விளங்கத் தோன்றவும் சிறிய நீர்ப் பள்ளம் பயன்படுகிறது. இவ்வா றுள்ள கருத்தை முற்காலத்தில் கொண்டுள்ளார் என்பதனை ஒருதாரணத்தால் எடுத்துக் காட்டலாம்.

'தினையளவு போதாச் சிறுபுல்நீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால்'

என்று வள்ளுவமாலையில் கபிலரது செய்யுளா லறிக.

இன்னும்,

'தாழ்நீர் மடுவில் தவளை குதிப்பினும்
யானை நிழல் காண்பரிது'

என்ற குமரகுருபரர் வாக்கையும் நினைவுறுத்திக் கொள்ளலாம்.

இதுகாறுங் கூறியவற்ருல், எதிர் உருவத்தைக் காட்டுவனவற்றுள் கண்ணுடியும் நீர்நிலையும் முக்கியமானவை என்றும், சங்க காலத்திலேயே கண்ணுடியைப் பலவகையில் உவமானமாகக் கொடுத்துள்ளார்கள் என்றும், கண்ணுடி தமிழ் நாட்டில் சங்க காலத்திலேயே உள்ளது என்றும், மண்ணுற் செய்த கண்ணுடிப் பொருள் ஏற்படுவதற்கு முன் மெருகேற்றிய பொன் தகட்டினுலும், வெள்ளித் தகட்டினுலும் வட்ட வடிவமாகச்செய்து செல்வர்கள் மாத்திரம் கையாண்டனர் என்றும், நீரிலும் வடிவம் தெரியும் என்பதையும் அறிந்திருந்தனர் என்றும் தெரியலாம். பொருந்துமா? சிந்திக்க.

நீத்தார் பெரியர்.

திரு. K. சோமசுந்தரம் பிள்ளை, B. A., B. L., தஞ்சை.

(முற்றொடர்ச்சி துணர் ௨௫—மலர் ௩ பக்கம் 93)

கூறட் பாயிரம் பாராட்டிக் கூறும் நீத்தா ரென்னும் சொல் துறவறத்திற் குரிய முற்றத் துறந்த முனிவரரையும் அவரோ டொப்பாரையுங் குறிக்குமே யல்லாது, நல்லற மாகிய இல்லறத்தை மேற் கொள்வாரைக் குறிக்காது. அவ்வாறு வருந்திக் கூறுவது, ஆசிரியரது நுண்ணறிவிற்கும் விரிந்துயர்ந்த கருத்திற்கும் ஏதமா மென்க. மற்றும் கருதிய தொரு பொருள் பயவாத செலவினை மேற் கொண்டு இடர்ப் படல் இன்பமுமன்று. 'ஐந்தவித்தா னாற்றல்' என்ற குறள் விசும்புளார் கோமானாகிய இந்திரன் தன் அவாவினை அவியாமல், அவித்தவனாற் சாபம் எய்தினதை யும், ஐந்தவித்தானது இரு வகை ஆற்றலையும் சிறப்பை யுமே குறிக்கு மென்க. இதன் கண், முனிவர் மகப் பேறு குறித்த அறநெறிக்குத் தக்க மாமனையறம் பேணிய ஒழுக்க நிலையினைப் பற்றியும் குறிப்பா னுணர்த்த வல்ல தொரு சொல்லு மில்லை. மற்றும் முனிவரர் பெயரும் அவர் காதலாற் கலந்ததாகக் கருதப்படும் மனைவியார் பெயரும் ஈங்குக் காணுதற்குமில்லை. உண்மை இவ்வாறாக, கோதமன் காதை முழுவதூஉம் கற்பித்து இக் குறட்பாவில் புகுத்திப் பின் அதனையே துருவிக் காண வேண்டுமென்ற முயற்சியும் நோக்கமு முடையார், 'கோதமர் மனைவியோடு கூடியவ ராதலின், நீத்தா ரெனப் படுவார் தம் நலந் துறந்து அறத் தாற்றின் இல் வாழ்க்கை யாற்றும் பெரியார்' என்ற ஒரு முடிபுக்கு வருவது, வள்ளுவர் கருத்தாகாமை பெறப்படும். இவ்வாறு கூறுவது கோதமர் கொண்டதாகக் கருதப்படும் இல்லற வொழுக்க நிலையில் இழுக்கும் நெடும் பழியும் உணர்த்துவது மாகும். அற னென்று சிறப்பித்துச் சொல்லப்படுவது இல் வாழ்க்கையே யாயினும், பிறரால் அது இழிவாகப் பழிக்கப்படாதவாறு நயப்பாடு தோன்ற நடத்தப்படுமாயின், அஃது ஒளி விளக்கம் பெற்று இய

லழகு வாய்ந்து திகழு மென்பது ஈண்டுத் தேறப்படும். எனவே, நீத்தா ரென்பது அறனிழுக்கா இல் வாழ்வாரைக் குறிக்கு மெனல், அணுவளவும் பொருந்தாமை காணப் படுதலின், அஃது ஆசிரியர் கருத் தன்மையின், அது கோடற் பாற்றன் றென்பது தெளிவு.

இம்மை நலம் விரும்பி இல்லறத்தே நின்று இறை யின்பத்தைப் பற்றுதல் பிறவிக் கேதுவாமாகலின், பிறவி வலையினின்றும் மீண்டாரே துறவு பூண்டார். பிறவி வலையிற் பட ஒருப் படார் இம்மையே யல்லாது மறுமை யும் வேண்டா ராதலின், மண் ணரசோடு கூடிய இரு நலனும் வா னோர் சிறப்பும், வானுளும் செல்வமும் வேண்டார், நீத்தா ரெனப் படுவர். எனவே, நீத்தார், பிறவி வலையிற் சிக்குறுத பெருமையுடையா ரென்பது போதரும். சிந்தனையைத் திருந்த வைத்துச் சற்றுச் சிந்தித் துணரின், இல்லற வொழுக்க நிலையில் அவ் வொழுக்கத்து அணி நலம் விளங்கத் துறவறம் மேற் கொள்வார் ஒழுக்க நிலை, இழுக்கலுறும் கரவு நிலையாக முடிவில் நிற்கும். இத் தகையோர், இறை நிலை பெறும் நெறி அறியாதும், இறையினை அறியும் அறிவறியாதும், மருளுறும் மனத்தால் இடர்ப் படுவர். எனவே, அறிவற்ற வறட்டுத் துறவில் அறப் பயன் இல்லை யென்பது தெளியப் படும்.

மற்றும், நெறி வழுவாமல் நின்று இல் வாழ்க்கையில் நிலைத்து வாழ்பவன் நிலை, துறவற நிலையினும் இனிதென 'இயல்பினுன் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான், முயல் வாரு ளெல்லாந் தலை' என்ற குறுங் குறளில் வள்ளுவர் விளக்கி, உலக நிலையானும் உணர்வு நிலையானும் எய்தும் பயனுல் இல்லறத்திற்குச் சிறப்புக் கூறும் கருத்து ஆய்ந்து உணரற் பாலது. எழு சீரானுய இக் குறு வெண் பாட்டின் பால் துறவறத்தின் பெருமையினைக் குன்றக் கூறல் நேரா வண்ணம், மெய்ப் பொருளுணர்ந்து பொறி யின்பங்களை யடக்கி முற்றத் துறந்தார் தம் நிலையினை அடைய முயலும் அற வொழுக்கத்தினை யுடையார் பலரினும், நெறி முறை வழாது செம்ம லுள்ளமொடு இல் வாழ்க்கை வாழ்பவர் சிறப்புடையார் என்று குறிக்கவே 'இயல்பினுன்' என்று

நளினமாகவும் நுணுக்கமாகவும் வள்ளுவனுர் அருள்வா ராயினர். பிறவியிற் கட்டுண்டு நிற்றலை யஞ்சி ஐம்புலனை அடக்கிப் பெறுவதாய பயனினும், அஞ்சுவதன்றியே இல்லின் கண் ணிருந்து தமது ஐம்புல இன்பங்களைத் தீரத் துய்த்து அப் பயனையே எளிமையிற் பெறுபவனே சிறப் புடையா னென்பது பெறப்படுதலான், ஓரோ வழி இல்லறத்தார் பெருமை பெறும் நிலை வலியுடைத் தென அறியப்பட்டது காண்க. முற்றத் துறந்த துறவோரை நீக்கி, அவர் தம் நிலையினை அடைய முயல்வாரை, 'முயல் வாரு ளெல்லாம்' எனச் செந் நாப்போதார் கூறியதாலும், 'நீத்தார் பெருமை' யில் முற்றத் துறந்தாரது செயற் கருஞ் செய்கையா லெழுந்த பெருமையினை முழுவதூஉம் உணர்த்தியதாலும், துறவோரினும் சிறப்பும் உயர்வும் இல்லறத்தார்க்குக் கூறுதல் ஆசிரியர் கருத்திற் கியைந்த தாகத் தோன்றவில்லை யென்பது ஒருவாறு ஊகிக்கப் படும். எனவே, துறவு நிலையினை அடைய முயலும் நெறி யில் விரும்பி முயல்வார்களில், இயல்பொடு இல் வாழ்ப வனே பெருமைக் குரியவ னென்பது கொள்ளத் தகுந்தது.

இல்லற வாழ்வு நிலையெனும் கடனை ஆற்றி அதன் வழியே யானென தென்னும் செருக்கற்றுத் துறவறத்திற் சேறல் நெறியாதலின், முற்றத் துறந்த தவ ஒழுக்கத்திற்கு இல்லறம் நல்ல பயிற்சிக் கூடமாகும். தூய இல்லற நெறியே, அந் நெறியிற் படர்ந்தாரை முதற் கண் சிற்றின் பத்தின் இயல்பினை அறியச் செய்து இறுதியில் வீட் டின்பத் துறையிற் சேர்க்கு மென்பது அறியற் பாற்று. இல்லறம் சிந்தைதனைத் தெளிவிக்கும் பழகு நெறி யாதலான், அதனைப் பயிலாது எடுத்த எடுப்பிலேயே துற வற நெறி விழைவார் ஓரோவழி அடற்கரிபோல் வரும் ஐம்புலன்களுக்கும் அஞ்சி அல்லலுறும் புன்மையராகவு மாவர். மற்றும் மாதர் தம் சூழலில் பட்டுத் தடுமாறி மெலிந்தும் தம் திறம் மறந்தும் ஐம் புலன் ஆற்றின் கரை மரமாய் வேரறுவர். எனவே, புலன்களின் மேற்செல்லும் இச்சையினை ஒறுத்து வெறுக்கவும் ஐம் புலன்களால் அடை யும் மயக்கினை நீக்கவும் வகுக்கப்பட்டது இல்லற நெறி என்க. இந் நெறியிற் பழகியோர் விருப்பும் வெறுப்பு மற்ற தவ மென்னும் விழுச் செல்வ நிலையினை எளிதாய் அடைய முயலுதற்குரியா ரென்று மேலைக் காட்டிய

'இயல்பினுன் இல் வாழ்க்கை' என்ற தொடக்கத்துக் குறட்பா வலியுறுத்தல் கண்கூடு. இல் வாழ்வார், தாம் புரியும் தானத்தால் தவத்தின் பயனை எய்தினுலும், அன்னவர் தம்மால் இயன்ற அளவேனும் மறவாது தவம் செய்து பழகல் வேண்டு மென்பதையும்,

> **துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்**
> **மற்றை யவர்கள் தவம்.**

என்ற குறட்பாவில் வள்ளுவர் வன்மை தோன்றக் கூறியதை யுங் காண்க. இஃதோடமையாது,

> **வேண்டிய வேண்டியாங் கெய்தலாற் செய்தவ**
> **மீண்டு முயலப் படும்,**

எனத் திருவள்ளுவர் மேலுங் கூறியதினுன், தானத்திலும் சிறந்தது செவ்விய தவ மாதல் பற்றி, இல்லறத்தார் தீரத் துறந்து சென்று வீடு பேறுகிய பயனை எய்தும் பொருட்டுத் தவத்தைச் செய்யாது கொன்னே இல் வாழ்க்கை நிலையில் தோய்ந்து நிற்பது அவமாம் என்பது புலப்படலாயிற்று. மற்றும் இரு வேறு நிலைத் திறத்தா ரியல்பும் இனைத் தென்பதூஉம் நன்கு விளக்கப்படுத லறிக. எனவே, இல்லறமாகிய எளிதாய்ப் பழகும் நெறியின்கண் பயிற்சி பெற்றுர் தாம், தவ வுலகிற் புகல் வேண்டு மென்பது அறிவானுன்ற சான்றோ ராணை.

ஒத்த பிறப்பினையுடைய மக்களுளே, உடம்பு பெற்றுரெல்லாம் உயிரைப் பெற்றவ ராயினும், உயிரைப் பொறிகளுக்கு உரிமையாக்காது தனக்கே முழுவதூஉம் உரிமையாக்கிக் கொண்டு, நில்லா வுலகில் நிலைபெறும் தவ ஒழுக்கத்தை உள்ளவாறு உணர்த்த வல்லார் தாம் நீத்தா ரெனப்படுவர். வேண்டிய வேண்டியாங்கு எய்துதல் தவத்தின் ஊற்ற மாதலின், மெய்த் தவத்தால் சிறந்த நீத்தார் தம் முயிர்க்கும் இன்பஞ் செய்தவ ராவர். இத் தகையோர்க்கு உலகம் அடங்கி நிற்றலால், நீத்தா ரியல்பு ஆருயிர்க் கினியராய்ச் செயற்கரிய செய்வது என்பது துணிபு. எனவே, தவ முதிர்வான், நீத்தார், இறைவனது ஆற்றலைச் செயற்கையின் எய்தியோ ராதலின், ஓரளவு பாடுடைய அன்பும் அறனும் உருவாக் கொண்ட நீத்தாரை, அளவுபாடில்லாத அருமையாய அறிவும், அன்பும், ஆற்றலொடும் இயற்கை எழிலும் நிறைந்த, அற வடிவனுய

முதல்வனினின்றும் வேறுபடுத்திக் காணும் பொருட்டு வள்ளுவர் கடவுளரைக் கூறுமிடத்து 'பொறிவாயிலைந் தவித்தான்' என்றும், நீத்தாரைக் குறிக்குங்காலை 'ஐந் தவித்தான்' என அடையின்றியே வாளா கூறியதும் தெளிந் துணரு மியல்பிற்று.

பொறியை வழியாகவுடைய ஐயுணர் வுடையார், மெய் யுணர் வழி, அவ் வுணர்வை அவாவின்கட் புக விடாது அவித்தல் அருமைப்பா டுடைத்து. அவ்வாறு மனத்தைப் புலன்வழிப் போகவிடாது நலனுற நிறுத்திச் செயற் கருஞ் செய்கையுடையவர்தாம் நீத்தா ரென்ற முடிந்த உண்மைப் பொருளை, தமிழ் மா மறை யுடையார் அளவை முகத்தான் ஒவ்வொரு குறட்பாவிலும் வரை யறுத்து விளங்க வைத்தது மறுவற நன்குணர்ந்து பயன் கொள்ளற் பாற்று. எள்ளருங் குணனும் பெருமையுஞ் சான்ற வள்ளுவனுர் நீத்தார் தம் பெருமை உல கொப்பிய தாதலைக் கண்டுணர்ந்து, நீத்தார் பெரிய ரென்ற உண்மை யினை,

> ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து
> வேண்டும் பனுவற் றுணிபு.

என்ற குறட்பாவில் நுட்பமும் ஒட்பமும் சிறக்க ஆகம அளவையான் அறிவுறுத்தி யுள்ளார். மற்றும், அன்னவரது பெருமையினை,

> துறந்தார் பெருமை துணைக்கூறின் வையத்
> திறந்தாரை யெண்ணிக்கொண் டற்று.

என்ற குறளில் உவமான அளவையான், இறந்தார் தொகைமேல் வைத்து அதன் வரம்பின்மை மொழிந்து, பின்னர்,

> இருமை வகை தெரிந் தீண்டறம் பூண்டார்
> பெருமை பிறங்கிற் றுலகு

என்ற அருமைக் குறட்பாவில் நீத்தாரது நுவன்றிடற் கரிய பெருமை ஒப்பின்றி உலகின் கண் உயர்ந்து பிறங்கு தலை அபாவ அளவை யான் எடுத்தோதி, புலன் மீறிச் செல்லும் பொறிகளை அறிவு எனும் ஒரு தோட்டியான் ஐந்து யானைகளை யடக்கும் ஆற்றலுடையார் நீத்தாரென

அனுமான அளவையான்

> உரனென்னும் தோட்டியான் ஓரைந்தும் காப்பான்
> வரனென்னும் வைப்புக்கோர் வித்து

என மீண்டும் விளக்கங் காட்டி அருளியுள்ளார். மற்றும்

> 'ஐந்தவித்தா னாற்ற லகல் விசும்பு ளார் கோமான்
> இந்திரனே சாலுங் கரி'

என்ற வெண் குறட்பாவில் ஐந்தவித்தாரது ஒன்னார்த் தெறும் ஆற்றலையும், காம முனிந்த கலை முனிவர் பிழை பொறுக்கும் பெருமையினையும் பண்டு தொட்டு வரும் வழக்குண்மை யென்ற அளவையான் கூறித்தெளிவித்தார். நீத்தார் செய்தற்கு அரியவாவன, ஐந்தவித்தல் முதலாயின எனக் கூறிய வள்ளுவர், நீத்தார் துறந்தவகை யொன்றி னுன் மட்டும் பெரியர் எனக் கொள்ளப்படாதென்றும், நீத்தாருள்ளும் செயற்கரியன செய்வாரே பெரிய ரென் பதை

> 'செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர்
> செயற்கரிய செய்கலா தார்.

என்ற வெண் குறளில் அருத்தாபத்தி முறையில் குறிப் பாக உணரவைத்தும் பின் குணஞ் செயல் வகையில் அன் னார் தம் மாட்சியையும் பெருமையினையும்

> குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
> கணமேயுங் காத்த லரிது

என்ற தெள்ளிய குறளில் சிறப்புற விளங்க வைத்தார். அறிவு, அடக்கம், மெய்யுணர்வு, அவாவின்மை முதலாய அரிய குணமெனும் குன்றேறி நின்றாரிடத்துக் கணப் பொழுது பிறக்கும் வெகுளியிலிருந்து, வெகுளப்பட்டார் தம்மைக் காத்துக்கொள லரிதெனினும், அன்னாரது உள் ளங் கவர்ந்தெழும் வெகுளி, தோன்றிய அக்கணமே கெடு மாதலான், நீத்தாரைக் குணத்தில் வழுவினாரெனக் கூற லமையாது. நீத்தார், யானெனதென்னும் செருக்கினை ஒழித்தவராதலின், அன்னார்க்கு ஒன்னா ரில்லாதது இயல்பு. ஓரோவழி அவர்தம் வெகுளிவாய்ப்பட்ட ஒன்னாரிருக்க நேரின், அஃதும் அன்னவராலன்றி அவரது தவ வன்மை யால் ஏற்பட்டதென்பது துணியப்படும். எண்ணியது எண்ணியவாறு எய்த, உள்ளத்தால் வெகுளியை உள்ளு

வது தகாதாதலான், வெகுளியினைத் தம்மைக் கடந்துபோக விடாது, அதனை அடக்கிக் காத்துக் கொள்ளுங் குணமே நீத்தார்க்குப் பெருமையாகும். மற்றும் நலிவுறு வெகுளியினைச் செல்ல வல்லவிடத்தும் செலுத்தாது தம்மை அறிவால் காப்பவர் தாம் அருந்தவக் கொள்கையில் திருந்திய தன்மையராய்த் திகழ்வர். இத்தகைய சினமின்மையும் மன நன்மையுமுடைய அருளாளர் அரிய செய்து இறவா இன்பம் எய்துவர். எனவே வெகுளியைச் செய்தல் அருளுடைமைக்கு மாறுனதினுன், வெகுளியைப் பொறுத்தல் நீத்தார்க்கு உரிய தாயிற்று. பொறியின்பம் நாடும் சிறியார் உணர்விழந்து அவ்வாறு செய்யும் ஆற்ற லிலராதலான், அன்னுர் இறப்புத்துன்பம் அடைவது உறுதி. எனவே சிறியர் செயற்கு அரிய செய்யமாட்டா ராதலான், செயற்கரிய செய்வார் பெரியர் என்ற பொது வுண்மையில், சிறப்புண்மையினைத் துணிதலே நேரிது. பெரியர் செயற்கரிய செய்வார்; நீத்தார் அரிய செய்வார். ஆதலின் நீத்தார் செயற்கரிய செய்தலான் பெரியர் என்பது மலையிலக்கே யாமென்க.

> சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
> வகை தெரிவான் கட்டே யுலகு

என்ற ஒரடி முக்காலில் செந்நாப் புலவர், நூற்றின் கண்ணது பத்து என்புழிப் போன்று நீத்தாரிடத்தே இவ்வையக மென்றும், மற்றும்,

> அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்
> செந்தண்மை பூண்டொழுக லான்,

என்ற குறளில் நீத்தாரது அருள் உள்ளத்தின் கண்ணது உலகத்துயிர்கள் எனவும், சம்பவம் எனும் அளவையாற் புலனுக வைத்துக் காரண காரிய இயைபுடன் செப்பியதினுன் நீத்தார் பெருமை நிலை ஒருவகையான் துணியப்பட்டது தெளிக. இதனுன் உலகக் கூறுபாட்டை அறிந்து அதன் தோற்றத்தில் மயங்காது மெய்யுணர்வு கைவரப் பெற்ற நீத்தார்க்கு, பிறவுயிர்கள் போல் பேரருளுடைமை பெரிதும் இன்றியமையாத தாயிற்று. இஃதோடமையாது நீத்தார் பெருமையினை எளிய வகையானே காட்சி

யளவை முகத்தான் எடுத்துக் காட்டத் திருவள்ளுவர்

> நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
> மறைமொழி காட்டி விடும்

என்ற வெண் குறளில் வாய் மலர்ந்து பெய்து வைத்த நுண்மை பெரிதும் கருத்திருத்தத் தக்கது. நீத்தார் பெருமையினை அவர் தம் மறை மொழிகளே உலகறியக் கண் கூடாகக் காட்டிவிடு மாதலான், நீத்தார், சிறந்தது பழகும் தெளிவான் தெய்வத் தன்மையுற்றவராவர்.

எனவே நீத்தார் பெரிய ரென்று கொண்டு அவர் தம் பெருமையினை எண் வகை அளவை யான் வள்ளுவர் நிறுவிய வகையினை நோக்குழி, நீத்தார், உலகியலறிந்து உணர்வை உரம் பெறச் செய்யும் அருள் நிலை ஒழுக்கத்தை வழுவாது பற்றி, மறுமை வேண்டாதே பிற வொழுக்கம் நீத்த தவப் பேறுடைய அறவோ ரென்பதூஉம், அன்னார் உலகப் பற்றினையும் அவாவினையும் அகத்தே துவரத் துறந்ததினுன், மெய்யுணர்வும் வீழுப்பமும் வாய்ந்த தெய்வப் பெற்றிய ரென்பதூஉம், இத் தெய்வத் தன்மை யான் ஒழுக்கத்து நீத்தார் ஒன்னார்த்தெறும் ஆற்றலுடன் உவந்தாரை யாக்கும் ஆற்றலும் கொண்டு செயற்கரிய செய்கையால் பெருமைக் குரியராய் நின்று, என்றும் வழுக்கலிலராய் மற்றீண்டு வாரா நெறியில் தாமே தலைப்பட்ட தவத் திருவுடையா ரென்பதூஉம், துன்பத்திற்கு இடமாயுள்ள இவ் வையத்தில் நீத்தார்க் குண்டாகும் இன்பப் பேற்றினும் சிறந்த தொன்று வேறில்லை யென்பதூஉம் இவ்வாற்ருல் இனிது விளங்கா நிற்கு மென்க.